மாலை பதிப்பு
# சுபீட்சம்
சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
11.11.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# மழை காரணமாக நீரில் மிதக்கின்றது அம்பாறை மாவட்டம்



**(பாறுக் சிஹான்)**

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை அக்கரைப்பற்று நிந்தவூர் நாவிதன்வெளி சம்மாந்துறை பிரதேச பகுதிகளில் வாழும் மக்கள் மழை வெள்ளம் காரணமாக சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த மழை வெள்ளத்தின் காரணமாக இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை பாண்டிருப்பு நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு காரைதீவு சம்மாந்துறை அக்கரைப்பற்று பகுதிகளில் இப்பிரதேசத்தில் பல குடும்பங்கள் வெள்ளத்தினால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதுடன் தற்போது அங்குள்ள மக்கள் வீடுகளிற்குள் மழை

02

# உலகில் அதி உன்னதமான ஆன்மீக தியான சந்நிதானத்தில் இருப்பதாக உணர்கிறேன்



மட்டு.இ.கி.மிஷன் விஜயத்தின்போது கிழக்கு ஆளுநர் அனுராதா பெருமிதம்

**( காரைதீவு நிருபர் சகா)**

உலகில் உன்னதமான ஓர் ஆன்மீக புனித சன்னிதானத்திற்கு வருகை தந்ததில் மிகவும் சந்தோஷம் அடைகின்றேன். இப்படி அருமையான ஆன்மீக சந்நிதானம் கிழக்கிலங்கையில் இருக்கின்றது என்பதனை இன்றுதான் அறிந்து மிகவும் பூரிப்படைகிறேன். இவ்வாறு மட்டு.கல்லடி இராமகிருஷ்ண மிஷனுக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் நேற்று(10) வியாழக்கிழமை மாலை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனுக்கு விஜயம் செய்தார். அவருடன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், மாகாண கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் சிவ.சுதாகரன் ஆகியோரும் விஜயம் செய்தனர். ஆளுநரை இல்ல மாணவர்கள் வரவேற்றனர். மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது

02

# வடக்கு தமிழர்கள் என ஜனாதிபதி அழைப்பது தவறு வடக்கு கிழக்கு தமிழர்களுக்கும் பிரச்சனை என்பதே சரி

## பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களைக் கண்டு அஞ்சுகின்றனர்

**இம்ரான் மஹ்ரூப்**



**(எப்.முபாரக்)**

தற்போது பலஅமைச்சர்களும் அரசாங்க ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் கொழும்பிலையே தங்கி இருக்கிறார்கள். அவர்களால் அவர்களுடைய ஊருக்கும் தொகுதிக்கும் செல்ல முடியாமலும் மக்களை சந்திக்க முடியாமலும் இருக்கிறார்கள். இதனால் தேர்தலை பிற்போடும் நிலைப்பாட்டில் இருப்பதாகவும் இவர்கள் கொரோனா முடிவடைந்த பிற்பாடும் கொழும்பிலேயே தனிமைப்படுத்தலில் இருப்பதாகவும் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார் . மேலும் அவர் தெரிவிக்கையில்:– இவர்கள்

02

## பா.அரியநேத்திரன் மு.பா.உ



வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்பதற்கே தமிழ் தேசிய அரசியல் தலைவர்கள் உள்ளனரே அன்றி தனியாக வடக்கு மக்களின் பிரச்சனைக்கு மட்டுமல்ல என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணரவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், இலங்கை தமிழரசு கட்சி பட்டிருப்பு தொகுதி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் வடக்கு தமிழர்களின் பிரச்சனைக்கு அடுத்தவருடம் சுதந்திர தினத்திற்கு முன்னம் தீர்வு கிடைக்கும் எனவும் ஒருவாரத்தில் தமிழ் அரசியல் கட்சிகளையும் சந்திக்கவுள்ளதாக கூறிய கருத்து தொடர்பாக மேலும் கூறுகையில்.

தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வாக இருக்கலாம், அன்றாட பிரச்சனைகளாக இருக்கலாம்,

02




## மாணவர்களுக்கான பகல் உணவை இரு மடங்காக அதிகரிக்க எதிர்பார்ப்பு

11 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவர்களுக்கு வழமை போன்று தேவையான அளவு உணவு தற்போது கிடைப்பதில்லை என நாடாளுமன்றில் இன்றைய தினம் உரையாற்றிய கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், தற்போது மாணவர்களுக்கு பகலுணவு வழங்குவதற்காக நிதியம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். மேலும், நிதியத்தின் ஊடாக உணவு வழங்கும் நடவடிக்கையை இரு மடங்காக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.



## பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களைக் கண்டு அஞ்சுகின்றனர்

தேர்தலை பிற்போட முயற்சிக்கிறார்கள். மாகாண சபை தேர்தல் என்றால் அதில் சில திருத்தங்களை கொண்டு வர வேண்டும் எனவும் தேர்தல் முறையில் மாற்றம் வேண்டும் எனவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பேசினால் அதன் உறுப்பினர்களை குறைக்க வேண்டும் என்றும் அதில் மாற்றம் வரவேண்டும் எனவும் கூறுகிறார்கள்.

இவர்கள் இப்படி கூறுவதன் மூலம் இவர்கள் அனைவரும் மக்களைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

## உலகில் அதி உன்னதமான ஆன்மீக தியான சந்நிதானத்தில் இருப்பதாக உணர்கிறேன்

முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோரும் வரவேற்றனர். அங்கு, ஆளுநர் அனுராதா மேலும் பேசுகையில் . கிழக்கு மாகாணத்தில் இருந்து கொண்டு இங்கு வராமல் இருந்ததால்
கடந்த மூன்று வருட காலத்தை நான் இழந்து விட்டேன் என நினைக்கிறேன். இராமகிருஷ்ண மிஷன் பணிகள் பற்றி அறிந்திருக்கின்றேன். இருந்தபோதிலும் இங்கு வந்த பொழுது தான் அந்த ஆன்மீக தியான புனித பூமியை உணரமுடிந்தது. ஒரு கணம் மெய்சிலிர்த்து போனேன் . இல்ல மாணவர்களின் நடைமுறை, இங்கு உள்ள சுத்தம் ,சுகாதாரம், ஒழுங்கு ,ஒழுக்கம் , நடைமுறைகள் என்பது என்னை மேலும் ஒரு படி ஈர்த்து நிற்கின்றன .

இந்து சமய தத்துவத்திலே சாங்கிய தத்துவம் ஒன்றிருக்கின்றது .அது பௌத்த சமயம் சார்ந்தது என்ற விடயத்தை இங்கு சுவாமிகள் கூறித்தான் அறிந்து கொண்டேன். உலகில் உயர்ந்த ஒரு தியான இடத்துக்கு வந்ததாக உணர்கிறேன் . நானும் பல பௌத்த உயர் தியான பீடங்களுக்கு சென்று இருக்கின்றேன் .இங்கு வந்ததும் அதே போன்று உயரிய ஆன்மீக உணர்வு எனக்கு ஏற்பட்டது . சுவாமிகளின் அன்பான வரவேற்பு இல்ல மாணவர்களின் அன்பான உபசரிப்பு எல்லாம் என்னை திக்குமுக்காட செய்கின்றது. விரைவில் நான் இமாலயம் செல்ல இருக்கின்றேன் .அங்கு தியாகம் செய்வதற்காக. இராமகிருஷ்ண மிஷன் உதவி கிடைக்குமானால் பெரு மகிழ்ச்சி அடைவேன். என்று புகழாரம் சூட்டினார் . மேலும் சுவாமிகளிடமிருந்து பல இந்து சமய தத்துவ கருத்துக்களை ஒரு மணி நேரம் அமைதியாக இருந்து முற்றாக கேட்டு அறிந்து தெளிந்து கொண்டார். வாழ்க்கையிலே இதுவரைக்கும் இந்து சமயம் தொடர்பாக அறியாத பல விடயங்களையும் இந்து பௌத்த சமயங்களுக்கு இடையிலான தொடர்புகளையும் பொது தத்துவங்களையும் நிறைய அறிந்து கொண்ட ஆளுநர் சுவாமிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.
வாழ்வில் இன்றைய நாள் மறக்க முடியாத நாள் மீண்டும் நான் வருவேன் என்று கூறி விடைபெற்றார். பின்னர் ஆளுநர் அனுராதா இல்ல மாணவர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் ஐஸ்கிரீம்களை வழங்கினார். அங்கு நன்னடத்தை துறையைச் சேர்ந்த முக்கிய அலுவலர்கள், பக்தர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மழை காரணமாக நீரில் மிதக்கின்றது அம்பாறை மாவட்டம்

வெள்ளம் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு காரணம் மழை நீர் வழிந்தோடுவதற்குரிய முறையான வடிகால் இன்மையே முக்கிய காரணம் என்ற குற்றச்சாட்டும் மக்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.
மேற்படி பிரதேசங்கள் ஒவ்வொரு வருடமும் மழையினாலும் அதனால் ஏற்படும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.சில வேளை இம்மக்கள் இடம்பெயரும் நிலைமை ஏற்படுகிறது. இப்பகுதிகளில் வசிக்கின்ற சில மக்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு ஒழுங்கான வீடமைப்பு வசதி இல்லை.ஒழுங்கான வீதி கிடையாது மின் சார வசதி இல்லை நீர் வடிந்தோட ஒழுங்கான வடிகால்கள் இல்லை. சிறுவர்கள் பாடசாலைக்கு செல்ல கஸ்டப்படுகின்றனர்.தொழில் செய்வது சிரமமாக உள்ளது இது தான் அம்மக்களின் நிலையாக உள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அன்றாட உணவுகளை சமைத்து உண்ண முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர். தற்போது வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக சில முகத்துவாரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வெள்ள நீர் தேங்கி காணப்படுகின்ற நிலைமையே தொடர்கதையாகவுள்ளது.

## வடக்கு தமிழர்கள் என ஜனாதிபதி அழைப்பது தவறு வடக்கு கிழக்கு தமிழர்களுக்கும் பிரச்சனை

அபிவிருத்திகளாக இருக்கலாம், போதை பொருள்பாவனை விடயமாக இருக்கலாம் அனைத்து விடயங்களும் தனியே வடக்கிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சனைகள் இல்லை இது வடக்கு கிழக்கு முழுவதுக்குமான பிரச்சனைகள் என்பதை ஜனாதிபதி அவர்கள் உணர்ந்து கொண்டு அதனை தீர்பதற்கு முன்வரவேண்டும். கிழக்கில் எந்த பிரச்சனைகளும் இல்லை வடமகாணத்தில் மட்டுமே பிரச்சனைகள் என்ற மனநிலைகளில் இருந்து ஆட்சியாளர்கள் அமைச்சர்கள் முதலில் விடுபடவேண்டும்.

கடந்த 74, வருடங்களாக இணைந்த வடக்குகிழக்கில் நிரந்தர சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வேண்டியே வடக்கு கிழக்கு முழுவதுமான அகிம்சை போராட்டங்களும், ஆயுத போராட்டங்களும், தற்போது இராஜதந்திர செயல்பாடுகளும் இடம்பெறுகின்றது. வடக்கை வேறாகவும், கிழக்கை வேறாகவும் பிரித்து எந்த ஒரு தமிழ்தேசிய கட்சிகளும் இதுவரை அரசியல் செய்யவில்லை இன்னும் செய்யப்போவதும் இல்லை இந்த உண்மையை விளங்கி ஜனாதிபதி ரணில் அவர்கள் தமது நடவடிக்கைகளை கையாளவேண்டும். தமிழ்தேசிய அரசியல் கட்சிசார்ந்த தலைவர்களும் இந்த விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கவேண்டும் தனியே வடக்கு தமிழ்மக்களின் பிரச்சனைகளை மட்டும் கலந்துரையாடும் கூட்டத்திற்கு ஜனாதிபதி அழைத்தால் அதில் கலந்துகொள்ளாமல் வடக்கு கிழக்கு இணைந்த தமிழ்மக்களின் பிரச்சனைகளை ஆராயும் கூட்டங்களுக்கு மட்டுமே தமிழ் தேசிய கட்சிகள் செல்லவேண்டும்.
தற்போது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை பெற வடக்கு தமிழர்கள் என்ற வட்டத்துக்குள் பிரச்சனைகளை முடக்கி சர்வதேசத்தை ஏமாற்ற எடுக்கும் நடவடிக்கைகளை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் எனவும் மேலும் கூறினார்.




## மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கான

# திறன் விருத்தி செயலமர்வு



மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவுடன் இணைந்து லிப்ட் நிறுவனம் நடாத்தும் ஊடகவியலாளர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வும், பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சியும் இன்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் டுஜகுவு நிறுவனத்தினால் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்படும் மற்றுமொரு வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று (11) திகதி நொச்சிமுனையில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது. ஊடகவியலாளர்களை பயிற்றுவித்து அவர்கள் மூலமாக இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சமூக மேம்பாட்டில் அக்கறையுள்ள ஊடகவியலாளர்களுக்கு முதற்தொகுதியாக 20 பேருக்கான பயிற்சி இன்று ஆரம்பிக்கப்பட்டது. இவ் மூன்று நாள் பயிற்சியை தொடர்ந்து இன்னும் இரண்டு தொகுதிகளாக மொத்தமாக 60 ஊடகவியலாளர்களுக்கு இப்பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. **GCERF** மற்றும் **HELVETAS** நிறுவனங்களின் நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சமூக மேம்பாட்டில் அக்கறையுள்ள ஊடகவியலாளர்களை பயிற்றுவித்து அவர்கள் மூலம் இளைஞர்கள் மத்தியில் பரப்பப்படும் வன்முறைத்தீவிரவாத எண்ணங்கள், சமூகஊடகங்களின் பிழையான பயன்பாடுகளை குறைத்தல் போன்றவற்றை முன்னெடுக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார், உநுடுஏநுவுயுளு நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் என்.ரமேஷ், மட்டக்களப்பு மாவட்ட தகவல் திணைக்கள பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன், மனிதநேய தகவல் குறிப்பு (மதகு) பணிப்பாளர் சபை அங்கத்தவர் எபனேசர் தர்சன், டுஜகுவு நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜானு முரளிதரன், டுஜகுவு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் வீ.கண்ணன், டுஜகுவு நிறுவன உத்தியோகத்தர்கள் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு வளவாளர்களாக பெண் மனித உரிமை செயற்பாட்டாளரும் பயிற்றுவிப்பாளருமான நளினி ரெட்ணராஜா, சிரேஸ்ட சட்டத்தரணி எம்.எம்.பஹீஜ் ஆகிய இருவரும் கலந்துகொண்டு சிறந்த முறையில் வளவாண்மை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

25300 | வே | 1975
யாழ்ப்பாணம் | இந்து
Germany | Manager
Diploma | அத்தம் (கன்னி)
179 செ.மீ

25273 | கோ | 1986
மாதகல் | இந்து | Canada
Tech Account Manager
சித்திரை (துலாம்) Degree
170செ.மீ | செவ்: 04

24448 | வே | 1992
துன்னாலை | இந்து Sri Lanka
Tech Writer | B.eng
சதயம் (கும்பம்)
190 செ.மீ

25272 | வே | 1976
யாழ்ப்பாணம் | இந்து | Switz
Volunteer Teacher
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ | செவ்: 01

25299 | வே | 1997
வேலணை | Newzland
Admin Staff | B.eng
ஆயிலியம் (கடகம்)
159 செ.மீ | சு +செவ்: 04

25274 | வே | 1994
யாழ்நகரம் | இந்து
Business | A/L
உத்தராடம் (மகரம்)
157 செ.மீ

25254 | வே | 1978
மட்டக்களப்பு | Australia
Forklift Driver | Diploma
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ

25264 | வே | 1989
திருகோணமலை | இந்து
Senior Software Engineer
Bsc | அத்தம் (கன்னி)
172 செ.மீ | சு + செவ்: 02

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

23341 | அ | 1959
கம்பஹா | இந்து | Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
188 செ.மீ

25293 | வே | 1994
முல்லைத்தீவு | Venezuela
Development officer
Degree | மூலம் (தனுசு)
150 செ.மீ | சு + செவ்: 08

25303 | வே | 1998
புத்தூர்முல்லை | Sri Lanka
Vocational Course
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ | செவ்: 02

24199 | வே | 1990
நல்லூர் | இந்து | MBA
Junior Excutive Asst
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | செவ்: 07

25262 | வே | 1996
கொண்டாவில் | இந்து | SL
Asst Project Manager
Bsc | மகம் (சிம்மம்)
157 செ.மீ | செவ்: 07

24283 | வே | 1994
நெல்லியடி | இந்து | Divorced
Graduate Teacher
Bsc | ரேவதி (மீனம்)
150 செ.மீ | செவ்: 12

25284 | வே | 1991
அல்வாய் | இந்து | Sri Lanka
Doctor | MBBS
பூரம் (சிம்மம்)
155 செ.மீ

23328 | வே | 1994
உரும்பிராய் | இந்து | SL
Lecturer
Bsc | மூலம் (தனுசு)
152 செ.மீ

since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்

# வரன் தேடுவோம் வாருங்கள்

ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மண-மக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

**யாழ்ப்பாணம்**
செல்வமஹால் 20-11-2022

**கொழும்பு**
தமிழ்ச்சங்கம் 27-11-2022

இந்தியாவிலிருந்து
# பிரபல ஜோதிடர்
## பட்டுக்கோட்டை சுப்ரமணியன்

அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில், உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு

நவம்பர் 20, 21, 22
யாழ்ப்பாணத்திலும்

நவம்பர் 24, 25, 26, 27
கொழும்பிலும்



முன்பதிவு செய்ய அழையுங்கள்
074 172 4524

**அருந்ததி பிரைவட் லிமிட்** | +94 777 164 524
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# ஏறாவூர் பற்று பிரதேச சபையில் கோணேசர் கோயில் ஆக்கிரமிப்பை எதிர்த்து கண்டன தீர்மானம்



மட்டக்களப்பு – ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று (10ஃ11ஃ2022) காலை 10, மணிக்கு சபையின் தலைவர் (தமிழ் தேசிய கூட்டமைப்பு) செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர் சி.சர்வானந்தனின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது தவிசாளர் சி.சர்வானந்தன் கிழக்குமாகாணத்தில் மிகவும் தொன்மையான வரலாற்று சிறப்பு மிக்க திருத்தலமாக விளங்கும் திருகோணமலை திருக்கோணேஷ்வர ஆலயம் சைவத்தமிழ் மக்களுடைய வரலாற்று பொக்கிசம்.

இந்தஆலயம்தற்போதுசிங்களபேரினவாதஆக்கிரமிப்புகளால் சூறையாடப்பட்டும் தொல்பொருள் திணைக்களத்தினால் அகழ்வாராட்சி எனும் திட்டத்தால் பௌத்தமய மாக்கல் மற்றும் திட்டமிட்ட சிங்கள வர்தகர்களுக்கு ஆலய்சூழலில் கடைகளை அமைத்து அதன்புனித தன்மை மீறப்படுகிறது இந்த செயலை வன்மையாக கண்டிப்பதுடன் உடனடியாக இதனை நிறுத்தி கோணேசர் ஆலயம் தமிழ் மக்களின் வழிபாட்டு தலமாக தொடர்ந்தும் அதன் புனித தன்மை பேணவேண்டும் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ..!

# ஆலையடிவேம்பு பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் 14 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

**ம.கிரிசாந்**

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் தவிசாளர் த.கிறோஜாதரன் தலைமையில் 14 மேலதிக வாக்குகளால் பாரிய ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. சபையின் அமர்வு நேற்று (10ஃ11ஃ2022) புதன்கிழமை தவிசாளர் த.கிறோஜாதரன் தலைமையில் இடம்பெற்றதுடன். 16 உறுப்பினர்கள் கொண்ட சபையில் ஒருவர் அமர்வில் கலந்து கொள்ளாத நிலையில் கலந்து கொண்ட 15 உறுப்பினர்களில் 14 பேர் ஆதரவாகவும் ஒருவர் நடுநிலையாகவும் வாக்களித்தனர். இதன் மூலம் 14 மேலதிக வாக்குகளால் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான 2023 ஆம் ஆண்டுக்கான செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது. மேலும் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் கடந்த வருடம் 10 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அம்பியூலன்ஸ் வண்டியை தாக்கிய நபர் கைது

**திருமலை ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை –மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு சொந்தமான அம்பியூலன்ஸ் வண்டிக்கு தாக்குதல் நடாத்திய சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் இருந்து நேற்று (10) மாலை 5.30 மணியளவில் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்லும் போது கன்னியா பகுதியில் மதுபோதையில் வீதியோரத்தில் நின்று கொண்டிருந்த இளைஞர் பொல்லால் அம்பியூலன்ஸ் வண்டியை தாக்கியதாகவும் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. இத்தாக்குதலில் அம்பியூலன்ஸ் வண்டியின் கண்ணாடிகள் உடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கன்னியா– 06ம் கனுவ பகுதியைச் சேர்ந்த உதய சந்ரன் சுரேஸ் குமார் (36 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்தது மட்டு.புனித சிசிலியா பெண்கள் கல்லூரி



2022 க்கான தேசிய ரீதியான தமிழ் தினப்போட்டிகள் கொழும்பு இந்து மகளிர்க் கல்லூரியில் 06.11.2022அன்று இடம்பெற்றது. இதில் திருமதி.நித்தியா விக்னேஸ்வரன் அவர்களின் நெறியாழ்கையில் புனித சிசிலியா பெண்கள் கல்லூரி திறந்த போட்டியான நர்டிய நாடகத்தில் பங்குபற்றி மூன்றாம் இடத்தைபெற்றது. தனி இசையி பிரிவு 4 இல் பங்குபற்றிய செல்வி.பிரதாயினி மூன்றாம் இடத்தை பெற்றதுடன் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது புனித சிசிலியா பெண்கள் கல்லூரி.

# ATMஇயந்திரம் திறப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் , தாதியர்கள், ஏனைய ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலைக்கு வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி இலங்கை வங்கியின் யுவுஆ இயந்திரம் ஒன்று இலங்கை வங்கியினூடாக ஸ்தாபிக்கப்பட்டு நேற்று (10) மக்கள் பாவணைக்காக உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் மத்திய மாகாண உதவி பொது முகாமையாளர் சரத் விஜயசிங்க, பிராந்திய முகாமையாளர் பி.விஸ்வநாதன், நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் எம்.ராமன், நுவரெலியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துக்கொண்டனர்.

# இலங்கை காப்போம் தொண்டு நிறுவனம் இலவசமாக குழநீர் இணைப்புக்கள் வழங்கி வைப்பு



**அபு அலா**

மிகவும் வறுமைக்கோட்டின்கீழ் வசித்து வருகின்ற குடும்பங்களுக்கு இலங்கை காப்போம் தொண்டு நிறுவனம் முற்றிலும் இலவசமான குடிநீர் இணைப்பு வசதிகளை வழங்கி வருகின்றது. அதற்கமைவாக, திருகோணமலை – சாம்பல்தீவு கிராமத்தில் வசித்துவருகின்ற குடும்பங்களில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக குடிநீர் வசதியின்றி மிகவும் கஷ்ட்டப்பட்டு வாழ்ந்து வந்த குடும்பங்களின் நிலைமையினை அறிந்த இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) உள்ளிட்ட குழுவினர் அக்கிராமத்திற்கு நேரடி விஜயத்தை மேற்கொண்டு அக்குடும்பங்களுக்கு முற்றிலும் இலவசமாக குடிநீர் வசதி இணைப்பினை இன்று (11) வழங்கி வைத்தனர்.

இக்குடிநீர் வசதி இணைப்பினை ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட முகாமையாளர் தேசமான்ய, தேசகீர்த்தி அப்துல் சமத் முஹம்மட் மஹ்றூப் மற்றும் இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) ஆகியோர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்த இணைப்பினை வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் காப்போம் தொண்டு நிறுவனத்தின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



கடுக்காமுனை அருள்நேசபுரத்தில் உள்ள கடுக்காமுனை வாணி வித்தியாலயம் மற்றும் கடுக்காமுனை பாலர் பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பிரித்தானியாவின் கரோவ் கவுன்சிலின் முன்னாள் மேயரும் தற்போதைய கவுன்சிலருமான லண்டன் பாபா என்று அழைக்கப்படும் சுரேஷ் கிருஷ்ணா அவர்களும், சிறப்பு அதிதிகளாக இளம் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார் அவர்களும், இந்து அறநெறி அபிவிருத்தி மன்ற தலைவர் வை. ரவீந்திரன் அவர்களும், லக்ஷ்மி நாராயணன் ஆலய தலைவர் வை.சந்திரமோகன் அவர்களும், மேலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இவ்விழா பிரதி அதிபர் எஸ் சிறிதரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இங்கு சாதனை புரிந்த மாணவர்களுக்கும் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

# தேசிய சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில அனுன் இரண்டாம் இடம்



**(ரக்ஸனா)**

தேசிய சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில் செங்கலடி வவேகானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த அனுன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். தேசிய ரீதியில் நடைபெற்ற சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி வவேகானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். தரம் ஒன்று தொடக்கம் 6 வரையிலான மாணவர்களிடையே தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட இவ்வருடத்திற்கான சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில் மட்.ககு.செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் ஆதவன் அனுன் எனும் மாணவன் தேசியமட்டத்தில இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மாணவர்கள் வாழும் சூழலை விஞ்ஞான நோக்கத்தேடு ஆய்ந்து அறியும் கற்றலை சிறு பராயத்தில் இருந்தே வளர்ப்பது இப்போட்டியின் நோக்கமாகும். ஊலக விஞ்ஞான தினமான வியாழக்கிழமை(10) இப்போட்டியில் தேசியமட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மேற்படி மாணவனை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும், உலக விஞ்ஞான தின நிகழ்வும் மேற்படி பாடசாலையில் வித்தியாலய அதிபர் க.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பாடசாலை மாணவர்கள் கண்டு பிடித்த பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு, தேசியமட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஆதவன் அனுன் என்ற மாணவரும் இதன்போது பராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

# “மனிதம் இல்லா பூமி” கவிதை நூல் அறிமுக விழா




**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

கரவாகு கலை இலக்கிய மன்றம் மற்றும் வியூகம் ஊடக வலையமைப்பு ஏற்பாட்டில் அக்குறனை அஸ்மியா நிஸ ாம் எழுதிய “மனிதம் இல்லா பூமி”கவிதை நூல் அறிமுக நிகழ்வு கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் தலைமையில் அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் நாளை (12) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந் நூல் அறிமுக நிகழ்வில்பொதுச்சேவைஆணைக்குழுவின் உறுப்பினரும்,முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம் பிரதம அதிதியாகவும் மற்றும் கௌரவ அதிதிகள் சிறப்பு அதிதிகள்கலை இலக்கிய அதிதிகள்,ஊடகவியலாளர்கள் என பலரும் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கண்டி மாவட்டம் அக்குறனையை சேர்ந்த அஸ்மியா நிஸாமின் முதலாவது வெளியீடு நூல் “மனிதம் இல்லா பூமி” என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# மன்னார் தலைமன்னர் பிரதான வீதியில் ஆமைகள் நீந்தி விளையாட தளம்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் ஆமைகள் நீந்தி விளையாடவும் விபத்துக்கள் ஏற்படா வண்ணம் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதனுடாக பயணிப்போர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இலங்கையில் ஒரு முக்கிய வீதியாக மதவாச்சி தலைமன்னார் வீதியான ஏ.14 திகழ்ந்து வருகின்றது. இந்த நிலையில் இந்த வீதியின் மன்னார் தலைமன்னர் பிரதான வீதி பேசாலையில் போக்குவரத்தும் சன நடமாட்ட இடமுமாக இருப்பதுடன் பாடசாலைகளுக்கு மாணவர்கள் தங்கள் துவிசக்கர வண்டிகளில் பயணிக்கும் ஒரு வீதியாகவும் இது அமைந்துள்ளது.

கடந்த ஓரிரு வருடங்களாக மன்னார் தலைமன்னார் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வந்தது. 'ஏ' தராதரத்திலுள்ள இவ் வீதியானது 'சீ' தராதரத்தில் நிலையிலேயே புனரமைக்கப்பட்டது என மன்னார் பிரஜைகள் குழு உட்பட பலரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டி வந்தனர். இருந்தபோதும் அது செவிடன் காதில் ஊதின சங்காகவே காணப்பட்டு வருகின்றது எனவும் தற்பொழுது பலரினதும் குரல் ஓங்கி வருகின்றது. இவ் வீதியின் பேசாலை நகரத்துக்குள் சுமார் 300 மீற்றர் நீளமுள்ள இந்த 'ஏ' 14 வீதியின் அவலநிலையை படங்களில் காணலாம்.

இவ்விடத்தில் வீதி விபத்துக்கள் மாத்திரமல்ல மழை காலங்களிலும் ஏனைய நேரங்களிலும் பாடசாலைகளுக்கு துவிச்சக்கர வண்டியில் செல்லும் மாணவர்கள் விபத்துகளுக்கு உள்ளாகிய நிலையும் எற்பட்டுள்ளது. வீதி அதிகார சபையிடம் பொது மக்கள் தற்பொழுது முன்வைத்திருப்பது பேசாலையில் இவ் வீதிக்கு அருகாமையிலுள்ள சுமார் 30 மீற்றர் தூ ரத்திலுள்ள கடலிருந்து ஆமைகள் நீந்தி விளையாட தளம் அமைக்கப்பட்டுள்ளதா அல்லது மழை காலங்களில் இவ் வீதியில் விவசாயம் செய்ய ஏற்பாடா என்ற கேள்விகளை இதனுடாக பயணிப்போரிடமிருந்து எழுந்து வரும் கேள்விகளாக எழுந்து வருகின்றன

ஆகவே வீதி அதிகார சபை இவ் வீதியை உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்காவிடில் மக்கள் போராட்டத்தில் குதிப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருவதாக அறிய வருவதுடன் இதனால் பேசாலையிலிருந்து தலைமன்னார் வரைக்குமான போக்குவரத்துக்கள் பாதிப்படையும் எனவும் பல கிராமபுற மக்களுக்கு இதனால் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் எனவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

# சருகுப் புலி விபத்துக்குள்ளானது



**-ஹஸ்பர்**

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதியின் தம்பலகாமம் சந்தியை அண்மித்த சுவாமிலை பகுதியில் சருகுப்புலி காருடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் இடம் பெற்றுள்ளது. குறித்த சம்பவம் இன்று (11) காலை இடம் பெற்றுள்ளது. காட்டுப்பகுதியில் இருந்து கோழியை பிடித்துக் கொண்டு பிரதான வீதியை கடக்க முற்பட்ட போதே காருடன் மோதி சருகுப் புலி விபத்துக்குள்ளானது. பலத்த காயங்களுக்கு உள்ளான குறித்த புலியை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் உரிய பகுதிக்கு சென்று மீட்டுச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் கந்தளாய் வனஜீவராசி திணைக்களத்தினர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பொறுப்பதிகாரியும் மற்றும் மாற்றீடு இல்லாத நிலையில் பேசாலை ஆயுள்வேத வைத்தியசாலை

**(வாஸ் கூஞ்ஞ)**

வடக்கு மாகாண சபைக்கு கீழ் இயங்கிவரும் பேசாலை ஆயள்வேத வைத்தியசாலையில் இரண்டு வைத்தியர்கள் கடமையாற்றி வந்தபோதும் வளர்ச்சி அடைந்து வரும் பேசாலை ஆயுள் வைத்தியசாலையில் தற்பொழது அங்கு வைத்தியர்கள் இல்லாமையால் நோயாளிகள் பெரும் அசௌரியங்களுக்கு உள்ளாகி வருவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. அன்மைகாலமாக மன்னார் மாவட்டத்தில் அதிகமான நோயாளிகள் ஆயள்வேத வைத்தியத்தில் ஈடுபாடு கொண்டமையால் மன்னார் தீவில் பேசாலை பிரதேச சபைக்கு உட்பட்ட பேசாலை , கரிசல் , ஓலைத்தொடுவாய் , சிறுத்தோப்பு , துள்ளுக்குடியிருப்பு , நடுக்குடா கீழயன்குடியிருப்பு , பருத்திப்பண்ணை , கட்டுக்காரன்குடியிருப்பு , தலைமன்னார் ஸ்ரேசன் , தலைமன்னார் பியர் மற்றும் தலைமன்னார் கிராமம் ஆகிய கிராமங்களில் சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றமையால்

இவர்களின் நலன் கருதி சில வருடங்களுக்க முன் பேசாலையில் ஒரு ஆயள்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டு இங்கு இரண்டு ஆயள்வேத வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் தற்பொழுது இவ் வைத்தியசாலையில் இரண்டு வைத்தியர்களும் அற்ற நிலையில் இவ் வைத்தியசாலை பெயரளவில் இயங்கி வருவதாக இங்கு சென்று வரும் யோயாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரிடம் வினவியபோது இவ் வைத்தியசாலைக்கு எந்த ஒரு பொறுப்பதிகாரியும் மற்றும் மாற்றீடு இல்லாத நிலையில் இங்கு கடமைபுரிந்த வைத்தியரை இது தொடர்பான மாகாண சபை அதிகாரிகள் மன்னார் மாவட்ட ஆயுள்வேத வைத்திய அதிகாரியின் ஒப்புதல் இன்றியும் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலைக்கு தற்பொழுது ஒரு வைத்தியர் சில சமயம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு மாகாண பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மேற்கொள்ளப்படும் திட்டமிடப்படாத செயல்பாட்டால் இவ் பகுதி நோயாளர்கள் அவதிகளுக்கு உள்ளாகி வருவதாகவும் இது தொடர்பாக இவ் பகுதி மக்கள் பிரதிநித்களும் கவனம் செலுத்தாத நிலை காணப்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுன்றது. மன்னார் மாவட்டத்தில் ஐந்து ஆயுள்வேத வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. மடு , தாழ்வுபாடு , பேசாலை , நறுவலிக்குளம் , பள்ளமடு ஆகிய பகுதிகளில் இயங்கி வருவதும் குறிப்படத்தக்கது.

# தோப்பூர் பிரதேசத்தில் நிலக்கடலை செய்கை



தோப்பூர் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச்செய்கையான நிலக்கடலை (கச்சான்) வெற்றியளித்துள்ளதாக பயிர்ச்செய்கையாளர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். இம்முறை உரிய நேரத்திற்கு போதுமான அளவு மழை கிடைக்கப்பெறுவதாகவும் முளைதிறன் அதிகமாகவுள்ளதாகவும் தெரிவித்தனர். இதனால் கடந்த வருடத்தினை விடவும் இம்முறை அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் தற்காலத்தில் பயிர்ச்செய்கை செலவு அதிகரித்துள்ளதால் கமநல சேவை நிலையம் மூலமாக அரசாங்கம் விதை மானியம் தரந்துதவுமாறு பயிர்ச்செய்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு யாழ் இந்திய துணை தூதுவரை சந்தித்து மகஜர் கையளிப்பு



**(வாஸ் கூஞ்ஞ)**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பிரதிநிதிகள் வியாழக்கிமை (10.11.2022) யாழ்ப்பாணம் இலங்கைக்கான இந்திய துணை தூதரக தூதவரை சந்தித்து நூறு நாட்கள் சிவில் சமூகத்துடன் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை மகஜராக கையளித்துள்ளனர். இவ் குழுவினர் கடந்த நூறு நாட்கள் மக்கள் குரலாக முன்னெடுத்த ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு விடயமான மகஜரை யாழ் இந்திய துணை தூதுவர் திரு. ரகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கர் அவர்களிடம் கையளித்தனர்.

அப்பொழுது வடக்க கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினர் கடந்த 100 நாட்கள் வடக்க கிழக்கு பகுதியில் முன்னெடுக்க்பட்ட விடங்களின் விபரங்களை தெரிவித்தபோது அவற்றை மிகவும் உண்ணிப்பாக கேட்டறிந்தார். அத்துடன் இது தொடர்பாக யாழ் இந்திய துணை தூதுவர் இவ் மகஜரையும் தான் உங்களிடம் பெற்றுக் கொண்ட விடயங்களையும் எமது கொழும்பு இலங்கைக்கான இந்திய துணை தூதரத்துக்கு அனுப்பி வைப்பதுடன் இது தொடர்பாக டில்லிக்கும் தெரியப்படுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

இவர்கள் கையளிக்கப்பட்டிருந்த மகஜரில் 16 அம்ச கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதாவது வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும். இவ் மாகாண அலகின் ஆட்சியானது மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் ஐம்பது வீதம் பெண்கள் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். முதலமைச்சர் சபையின் தலைமை உறுப்பினராக திகழ வேண்டும்.

ஆளுநர் சபையை கட்டுப்படுத்தாதவராகவும் அவர் மத்திய அரசின் பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும். இவ் மாகாணத்துக்கு உட்பட்ட காணிகள் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்குள் அமைய வேண்டும்.

அ பி வி ரு த் தி சா ர் சர்வதேச ஒப்பந்தங்களை மாகாண ஆட்சி மேற்கொள்ள வேண்டும். காணி மற்றும் மாகாண ஆட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஏனைய விவகாரங்கள் மாகாண ஆட்சிக்கு வழங்க வேண்டும்.பொலிஸ் சேவைகள் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்த வேண்டும். 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவம் எங்கிருந்ததோ அங்கு நிலைகொள்ள வேண்டும்.

நீதித்துறை அரச நிர்வாகம் கல்வி பொது சுகாதாரம் பொது போக்குவரத்து தொலை தொடர்பு மின்சாரம் எரிபொருள் மாகாண ஆட்சிக்குட்படுத்த வேண்டும். என இவ்வாறு 16 கோரிக்கைகளை முன்வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

